1990 மார்ச் 29

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

திரு. சே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் இரண்டாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

8. சட்ட முன்வடிவு

(அறிமுகம் செய்தல்)

நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1990

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன் வடிவை, பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன் :.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

9. அறிவிப்புகள்.

(அ) மானியக் கோரிக்கைகள் 1990-91—மொழிதல் (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1990–91 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் மொழிவது குறித்து, மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :